செய்தி வெளியீடு எண். 232 நாள்: 26.04.2018

**தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பாக வேலைவாய்ப்பு முகாம் நடைபெறவுள்ளது - மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

திருவள்ளூர் மாவட்டத்தில் கிராம சுய ஆட்சி இயக்கம் (Village Self Governance Compain) திட்டத்தின் கீழ், படித்து வேலையற்ற ஆண் / பெண் இருபாலருக்கும் வேலைவாய்ப்பு அளித்திடும் வகையில் வேலைவாய்ப்பு முகாம்கள் 02.05.2018 அன்று காலை 10.00 மணி முதல் கடம்பத்தூர் வட்டாரம், அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி கடம்பத்தூரிலும் மற்றும் 04.05.2018 அன்று காலை 10.00 மணி முதல் கும்மிடிப்பூண்டி வட்டாரம், அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி கும்மிடிப்பூண்டியில் நடைபெறவுள்ளது. அதில் பல்வேறு வகையான வேலைவாய்ப்பு வழங்கக்கூடிய தொழில் நிறுவனங்கள் கலந்து கொண்டு வேலைவாய்ப்பு அளிக்க உள்ளனர்.

இம்முகாமிற்கு குறைந்தபட்சம், 5-ம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு மற்றும் பட்டயப்படிப்பு (டிப்ளாமோ / ஐ.டி.ஐ) படித்த ஆண் / பெண் இருபாலரும் கலந்து கொண்டு தங்கள் திறமைக்கு ஏற்ற நல்ல வேலைவாய்ப்பினை பெற்றிட இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது. வயது, கல்வித் தகுதி முதலான உரிய ஆவணங்களுடன் கலந்து கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவிக்கிறார்.

மேலும், விபரங்களுக்கு திட்ட இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, திருவள்ளூர் மாவட்டம், தொலைபேசி எண் - 044 - 27664528. 9444094382, 9444094384, 9444094385 என்ற முகவரியை அணுகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**